# ஆயிர வருட அரசாட்சி

1. இந்தபாடம் எல்லாரையும் கவரச்செய்கிற தன்மையுடையதாயிருக்கிறது. சமீப காலங்களில் பலதரப்பட்ட அடிப்படை கொள்கை கொண்ட கிறிஸ்தவ குழுக்களால் இதில் அதிக ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது.

2. மில்லினியம் (Millennium) என்று சொல்லப்படுகிற ஆங்கில பதம் மில்லி (Mille) என்ற வார்த்தையிலிருந்து வந்தது. அதற்கு அர்த்தம் ஆயிரம் என்பதாகும். அ-னஸ் (Annus) என்ற வார்த்தைக்கு வருடம் என்பது அர்த்தமாகும். மேலும் சரியான பெயர்சொற்படி பார்க்கும்போது அது விசேஷமான ஆயிர வருட காலப்பகுதியைக் குறிக்கிறது. அதாவது யேசுக்கிறிஸ்துவும் அவரது உண்மையான சபையும் பூமியின் மேல் ஆட்சி செய்யும் மகிழ்ச்சியும் செழிப்புமான 1000 வருட காலமாகும். அமில்லனியலிஸ்ட் (Amillennlalists) என அழைக்கப்படும் சிறுபான்மையான கிறிஸ்துவ மக்கள், ஆயிர வருட அரசாட்சியினை அல்லது பூமியின் மேல் வரப்போகிற தேவனுடைய இராஜ்ஜியத்தை கிறிஸ்துவும் அவரது உண்மையான சபையும் ஆட்சி செய்வதை மறுகின்றனர். அவர்கள் அந்த வேதபகுதிகளை ஆவிக்குரிய விதமாய் வியாக்கியானப்படுத்தி, “ஆயிரம்” என்பது அடையாளமான ஒரு எண் என்றும், வாக்களித்திருக்கும் இராஜ்ஜியம் சபையின் பூமிக்குரிய வாழ்நாட்களைத்தான் குறிக்கும் எனவும் கூறுகிறார்கள்.

3. ஆனால் அது சரியல்ல என்று வேதவாக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. அதாவது சங்கீதம் 90 : 4 மற்றும் II பேதுரு 3 : 8 (அப் 17 : 31; II தீமோ 4 : 1 உடன் ஒப்பிடவும்) வெளி 20: 4, 6ல் குறிப்பிட்டுள்ள 1000 வருடங்கள் சொல்லர்த்தமான ஆயிர வருடங்களைத்தான் அர்த்தப்படுத்துகின்றன. வெளிப்படுத்தின விசேஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு எண்களும் சொல்லார்த்தமாக பல இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன, அதாவது இரண்டு சாட்சிகள், ஏழு சபைகள், ஏழு தூதர்கள், ஏழு எக்காளங்கள் மற்றும் ஏழு கலசங்கள், பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், பன்னிரண்டு அஸ்திபாரங்கள், பன்னிரண்டு வாசஸ்தலங்கள், பன்னிரண்டு ஜாதிகள், பன்னிரண்டு விலை உயர்ந்த கற்கள் முதலியன சொல்லர்த்த எண்களே என்று நாம் அறிவோம்.

**ஆயிர வருட ஆட்சிக்கு முன்பு include மற்றும் ஆயிர வருட ஆட்சிக்கு பின்பு போதனைகள்**

4. பூமியிலே ஏற்படும் தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்த 1000 வருடங்கள் கொண்ட ஆயிர வருட ஆரசாட்சியில் நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களில் இரண்டு வித்தியாசமான வகுப்பாரைக் காணலாம்.

**Pre Millennialism**

ஆயிர வருட ஆட்சிக்கு முன்பு (ப்ரி மில்லனியஸம் - **Pre Millennialism**): இந்த போதனையின்படி கிறிஸ்து ஆயிர வருட ஆட்சிக்கு முன்பு வருகிறார் என்பதாகும். இதில் அவருடைய உண்மையான சபையுடன் ஆயிர வருடங்கள் ஆட்சி செய்வதற்கு வருகிறார். அந்த நாட்களில் எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கி போடும்வரைக்கும் ஆளுகைசெய்து உலகத்தை மனந்திரும்ப வைக்கிறார் என்பதாகும். (Iகொரி 15 : 25, ஏசா 42 : 3, 4).

**Post Millennialism**

ஆயிர வருட ஆட்சிக்கு பின்பு (போஸ்ட் மில்லினியலிஸம் - **Post Millennialism**): இந்த போதனைப்படி கிறிஸ்து ஆயிர வருட ஆட்சிக்கு பின்பு வருகிறார், மனந்திரும்பிய உலக மக்களை தம்மோடு எடுத்துச் செல்லவும், உலகத்திலுள்ள காரியங்களுக்கு முடிவு கட்டவும் வருகிறார் என்பதாகும்.

**உண்மையான கருத்து**

5. “ஆயிர வருட ஆட்சிக்கு பின்பு இயேசுவின் வருகை” என்ற (**Post Millennialism**) போதனை உண்மையல்ல என்பதை வேதாகமம் தெளிவாக காட்டுகிறது. ஏனென்றால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது உலகத்தில் மனுக்குலம் மனம்திரும்பியிருப்பதற்கு பதிலாக மனம்திரும்பாத உலகமாகவும், ஜாதிகள் கோபத்துடனும் தேவனுக்கு விரோதமாகவும் எழுப்பும். அவர்களது கோபம் அவர்கள் மேலே ஊற்றப்படும். (சங் 2: 1 - 12; வெளி 11 : 18; 19 : 11 – 21) மேலும் கடைசி காலங்களில் பொல்லாப்பு நிறைந்த கொடிய காலங்கள் வருமென்று வேதம்

கூறுகிறது (II தீமோ 3: 1 - 8). பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மென்மேலும் கேடுள்ளவர்களாவார்கள் (II தீமோ 3 : 13). அதனால் அநேகர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் (I தீமோ 4 : 1) பூமியிலே (உண்மையான) விசுவாசத்தை காண்பது அரிது (லூக் 18 : 8). நன்மையும் தீமையும் சேர்ந்தே வளரும். ஆனால் யுகம் முடியும் வரையில் தீமையின் ஆதிக்கமுடையதாக காணப்படும் (மத் 13 : 30, 39) கள்ளபோதகர்கள் தந்திரமாக கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வஞ்சிப்பார்கள் (மத் 24 : 24) அந்த காலங்களில் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து பரியாசம் செய்வது அதிகரிக்கும். (II பேது 3 : 3, 4) செல்வந்தர்கள் தங்கள் செல்வங்களை திரட்டுவதில் ஏழைகளை ஒடுக்குவார்கள். அவர்கள் பூமியிலே சம்பிரமமாய் வாழ்ந்து சுகபோகமாய் வாழ்க்கை நடத்துவார்கள் (யாக் 5 : 3 - 6).

6. நூறு வருடங்களுக்கு முன்பு லண்டன் மிஷனரி ஐக்கியத்தின் அறிக்கைப்படி, உலக ஜனத்தொகை 1,500,000,000. இதில் 500,000,000 (மூன்று நபரில் ஒருவர்) பெயரளவிலாவது கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். அதன்பிறகு மிஷனரிகளும், சுவிசேஷர்களும்பல்வேறு மிஷனரி ஊழியங்களின் மூலம் உலகத்தை கிறிஸ்தவமாக மாற்றுவதற்காக அதிக சிரத்தையோடும், தன்னலமற்ற தியாகத்தோடும், கடினமான இடுக்கண்களையும் பொறுமையாக சகித்து, மரணபரியந்தம் துன்பத்தை ஏற்று கஷ்டப்பட்டு உழைத்தார்கள். உலகத்தில் அனைவரையும் மனந்திரும்ப செய்வது உண்மையாகவே சாத்தியம்போல அநேகருக்கு காணப்பட்டது. ஒரு வகுப்பினர் “எங்களுக்கு 30 மில்லியன் டாலர் கொடுங்கள், நாங்கள் உலகத்தை மனந்திரும்ப வைத்துவிடுவோம்” என திரும்பத்திரும்பக் கூறினார்கள்.

7. ஆனால் நடந்தது என்ன ? இத்தனை மிஷனரி மற்றும் சுவிசேஷக முயற்சி எடுத்த போதும், சமீப கால புள்ளியல் கணக்குப்படி, உதாரணமாக “கிறிஸ்டியன் இன்குயரர்” (**The Christian Inquirer**) என்ற பத்திரிகையின்படி தற்போதைய உலக ஜனத்தொகை 4,000,000,000 இதில் 1000,000,000 பேர்தான் இப்போது பெயரளவிலாவது கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். அதாவது இப்போது நான்கு நபரில் ஒருவர்தான். மேலும் இந்த அளவில் உண்மை கிறிஸ்தவர்கள் மிகவும் குறைவு. அதிலும் உண்மை கிறிஸ்தவர்களின் விகிதம் ஓர் நூற்றாண்டுக்கு முன் இருந்ததைவிட தற்போது மிகவும் குறைவாகவே உள்ளது.

8. இதைக் குறித்து சிந்திக்கும் ஆற்றலுடைய மக்கள் வேத வாக்கியத்துடன் தங்களது விவேகமான காரணங்கள் மற்றும் உண்மை நிகழ்ச்சி மூலமாக ஒப்பிட்டு பார்க்கும்போது, ஆயிர வருட ஆட்சிக்கு பின்பு இரண்டாம் வருகை (**Post Millennialism**) என்ற போதனையுள்ளவர்களும் மற்றவர்களும் சுவிசேஷயுகத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு மனுக்குலம் முழுவதும் மனம்திரும்புதல் என போதிப்பது எதிர்பார்க்கக்கூடாது என்றும், சுவிசேஷ யுகம் அல்லது சபையின் யுகத்தில் இது தேவ நோக்கமும் திட்டமும் அல்ல என்பதும் அதிகமதிகமாக தெளிவகிக்கொண்டு வருகிறது. இல்லாவிடில் தேவன் எப்போதும் தனது நோக்கத்தை சாத்தான் மற்றும் பொல்லாத மக்களின் எதிர்ப்புகளின் மத்தியிலே நிறைவேற்றுகிறவராய் (ஏசா **46 : 9 – 11; 55 : 8 – 11**) இருக்கிறதால் முழு உலகமும் மனந்திரும்புதல் நிறைவேறிவருகிறதைக் காணக்கூடுமே.

9. பெரும்பாலான சிந்திக்கும் பிரசங்கிகளும், போதகர்களும், கற்பிப்பவர்களும் மற்றும் பிறரும், மனுக்குலத்தின் மத்தியிலிருந்து எல்லா இனம் பாஷைக்காரர்கள் மற்றும் ஜனங்கள் மற்றும் தேசங்களிலிருந்து ஒரு கூட்டத்தை தெரிந்தெடுத்து, பிரித்தெடுத்து சீஷர்களாக்குவதே (மத் 28 : 19; அப் 15 : 14; வெளி 5 : 9) ஆயிர வருடத்திற்கு முன்பு தேவனுடைய நோக்கமாகும் என்பதை அறிந்துவருகிறார்கள். அவர்களே ஆயிர வருடத்திற்கு முன்புள்ள ஆபிரகாமின் வித்து (சந்ததி), ஆபிரகாமின் பிள்ளைகள் (**the Premillennial Seed of Abraham**). அவர்கள் ஆயிர வருட ஆட்சியில் பூமியை ஆசீர்வதித்து, உலகத்தை மனந்திரும்பச் செய்வார்கள். (ஆதி 12 : 3; 22 : 16 - 18; கலா 3 : 8, 16, 29).

10. ஆயிர வருடத்திற்கு முன்பு ஆபிரகாமின் சந்ததியாக (**Seed** – வித்து) வருபவர்கள் பூமியிலே இராஜ்ஜியம் ஸ்தாபிதமாகும் முன்னர் கீழ்க்காணும் மூன்று படிகளின்மூலம் வந்தவர்களாவார்கள். I. மனந்திரும்புதல், 2. இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக விசுவாசித்தல், 3. பிரதிஷ்டை அல்லது தேவனுக்கென்று அர்ப்பணித்தல் ஆகியவை ஆகும். உண்மையான கிறிஸ்தவனாக வாழ மிகவும் கஷ்டமாகயிருக்கும் இப்பொல்லாத உலகத்தில் அவர்கள் தேவனுக்கும், அழைக்கப்பட்ட அழைப்புக்கும் தனது பிரதிஷ்டையை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர்களாய் இருந்தவர்களாவார்கள் (கலா 1 : 4; II தீமோ 3 : 12).

**ஆயிர வருட அரசாட்சி குறித்த வாஞ்சை அதிகரித்தல்**

11. ஆயிர வருட ஆட்சிக்கு முன்பு கிறிஸ்துவின் வருகை (**Pre – Millennialism**) என்ற போதனையும், கிறிஸ்துவும் அவருடைய உண்மையான சபையும் ஆளுகின்ற ஆயிர வருட அரசாட்சி குறித்தான வாஞ்சையும், நம்பிக்கையும் சமீப காலத்தில் அதிகரித்து கொண்டே வருகிறது. ஆயிர வருடத்திற்கு பின்பு இயேசுவின் வருகை (**Post Millennialism**) என்ற போதனையில் வாஞ்சையும், நம்பிக்கையும் பெருமளவில் குறைந்து இருக்கிறது. ஏனெனில் உலகத்தின் நிலைமை வர வர மிகவும் மோசமாகிக் கொண்டே போகிறது. இந்த யுகத்தில் உலகம் மனந்திரும்புதலுக்கான நம்பிக்கையின் எதிர்பார்ப்பும் மேலும் மேலும் தூரமாகிகொண்டே போகிறது.

12. மக்களிடையே இது குறித்து மறுக்கப்பட்ட அல்லது பேசப்பட்டாத அல்லது சிறிதளவு முக்கியத்துவம் காட்டின வேளைகளில், வந்து கொண்டிருக்கிற ஆயிர வருட அரசாட்சி குறித்து போதித்து, அதன் முக்கியத்துவத்தை எங்களது பத்திரிக்கைகள் மற்றும் பிரசுரங்கள் வாயிலாக பல வருடங்களாக எடுத்துக் காட்டப்பட்டு வருகிறது. அநேக சந்தர்ப்பங்களில் மற்றவர்களும் இதைக் குறித்து தெளிவாக புரிந்து கொள்ளாவிடினும், நிகழ்கால சத்தியத்தை குறித்து போதுமான அறிவை பெற்றிடாவிடினும், அவர்கள் இப்பொழுது இதைக் குறித்து போதனையின் மூலம் அதிகமதிகமாக வலியுறுத்தி எடுத்து சொல்வதை நாம் பார்க்கும் போது அது மிகவும் திருப்தியும், மகிழ்ச்சியும் அளிக்கக் கூடியதாக உள்ளது.

13. ஆயிர வருட அரசாட்சி மற்றும் தேவனுடைய இராஜ்ஜியம் பூமியில் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது வெகு சமீபத்தில் நடைபெற உள்ளது என்பதை பில்லி கிரகாம், எம்.ஆர்.டி. கான், டாக்டர். எஸ்டேப், ஹால் லின்ட்சி, சேலம் கிர்பன் (**Billy Graham , Mr. De Haan, Dr. Estep, Hal Lindsey and Salem Kirban**) போன்ற அநேக பிரபலமான சுவிசேஷகர்கள், பிரசங்கிகள் மற்றும் எழுத்தாளர்கள் அனைத்து உலகம் மீதான செல்வ செழிப்பு சமாதானம், தேவனும் அவருடைய திட்டம் பற்றிய அறிவு, பாதுகாப்பு மற்றும் சமத்துவம், பூரண அரசாங்கம் அமைவதற்கும் மற்றும் உலகம் முழுவதும் இதன் விளைவினால் பூரண ஏதேன் நிலைமை பெருகுவதற்கும் ஆயிர வருட யுகமே என்பதை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

14. தேவனுடைய இராஜ்ஜியம் வெகுசீக்கிரம் ஸ்தாபிக்கப்படும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று வேறு சிலர் நினைப்பது அர்த்தமுள்ள போக்கை காட்டுகிறது. இன்னும் அநேகர் முதல் படியாக இது குறித்த வெளிச்சத்தில் மேலும் வந்து, இது குறித்து அதிகமாக எடுத்துக்கூறி போதிப்பார்கள் என்றும், அடுத்தப்படியாக எல்லாரும் ஆயிர வருட ஆட்சியில் தேவனுடைய நோக்கம் மற்றும் திட்டம் பற்றிய அறிவை நன்கு புரிந்து கொண்டவர்களாயிருப்பார்கள் என்றும் தாங்கள் இந்த போதனையின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்துக்கொள்வார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

**படி 1: 1000 வருட பூமிக்குரிய இராஜ்ஜியம்**

15. நாம் முதலில், வேதம் சொல்லர்த்தமாக 1000 வருட ஆட்சி அல்லது கிறிஸ்துவும் அவருடைய உண்மையான மணவாட்டி சபையும் பூமியின் மேல் அரசாட்சி செய்வதை தெளிவாக போதிக்கிறது என்பதனை அறிந்து உணரவேண்டும். (வெளி 5 : 9, 10; 20 : 4, 6; II பேது 3 : 8; மத் 19 : 28; லூக் 12 : 32; 22 : 29, 30). இது பரந்த உலகத்தின் மீது பரிபூரண சுற்றுப்புரம், சூழ்நிலை பூரண அரசாங்கத்தோடு ஏற்படும் சமாதானம், செல்வச்செழிப்பு, தேவனைப் பற்றிய அறிவு, பாதுகாப்பு மற்றும் சமதத்துவம் வந்து கொண்டிருப்பதற்கான காலங்கள் ஆகும்.

16. அந்த சமயத்தில் சாபம் பூமியிலிருந்து எடுக்கப்பட்டு ஏதேன் தோட்டம் போல் மாற்றப்படும் (ஏசா 35 : 1, 2; 61 : 4; எசேக் 36 : 35). சாத்தான் முழுவதுமாக கட்டப்பட்டு தடுக்கப்படுவான், ஆதலால் அவன் ஜனங்களை ஒருபோதும் சோதிக்க இயலாது. நீதி ஜனங்களில் செல்வாக்கைப் பெறும்படி கிறிஸ்து முழுவதுமாக ஆளுகை செய்வார் (வெளி 20 : 1 - 3; சங் 72 : 7, 8; ஏசா 26 : 9; 42 : 3, 4). தப்பறையும், அறியாமையும் பூமியிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டு தவிர்க்கப்படும். சத்தியம் எங்கும் அதன் செங்கோலை உயர்த்திக்காட்டும் (ஏசா 25 : 7 – 9; 11 : 9). பாவம் கவிழ்க்கப்பட்டு நீதி சிம்மாசனம்மேறும் (சங் 107 : 41, 42 ஏசா 62 : 12). இம்மனுக்குல வம்சம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு எல்லா விஷயத்திலும் முழு சுயாதீனத்தை பெறும் வாய்ப்பு கிடைக்கும் (ரோம 8 : 20). எல்லாரும் மகிழ்ச்சி அடையும்படி மக்கள் சஞ்சலம் விலகி வழி கொடுக்கும் (ஏசா 35 : 10).

17. யுத்தங்கள் முடிவடைந்து சமாதானம் எங்கும் ஆட்சி செய்யும் (ஏசா 2 : 4; 9 : 7). நீதிமான்கள் இனி ஒருபோதும் துன்பப்படமாட்டார்கள். ஆனால் அவர்களுடைய நீதியினால் எங்கும் உயர்த்தப்படுவார்கள் (ஏசா 25 : 8; சங் 72 : 7). துன்மார்க்கர் இனி ஒருபோதும் உயர்த்தப்படமாட்டார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டு சீர்திருந்துவதற்காக அடிக்கப்பட்டு பின்னர் சீர்திருத்தப்படக்கூடாதவர்கள் நிர்மூலமாக்கப்படுவார்கள் (மல் 3 : 15, 18; ஏசா 26 : 9; சங் 37 : 35, 36). தவறான மார்க்கங்கள் இனி ஒருபோதும் இருக்காது ஒரே ஒரு உண்மையான மார்க்கம் எங்கும் ஏற்றுக்கொள்ளப்படும் (ஏசா 65 : 15; 60 : 14, 15; செப் 3 : 9). ஒடுக்குகிற அரசாங்கம் இனி ஒருபோதும் இருக்காது. கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்படும் அரசாங்கம் எல்லாருக்கும் ஆசீர்வாதம் அளித்து உதவி செய்யும் (ஏசா 21 : 2 – 4; 60 : 12; சங் 72 : 12 – 14). ஜனங்கள் இனிமேல் விருதாவாய் உழைப்பதுமில்லை. வருத்தப்பட்டு வேலை செய்ய வேண்டியதுமில்லை. ஆனால் எல்லாருக்கும் தேவனுடைய அரவணைப்பினால் செழிப்பு தழைக்கும் (ஏசா 65 : 23; 60 : 17). அப்போது சுயநலத்தால் பிறர் பொருள் மீது ஆசை வைத்து பிறரை சுரண்டி வாழ்வது, வறுமை போன்றவை இருக்காது. ஆனால் எல்லாரும் அவரவர் உடைமைகளை மகிழ்ச்சியோடு பயப்படுத்துவாரில்லாமல் அனுபவிப்பார்கள் (ஏசா 65 : 22; மீகா 4 : 4).

18. இது குறித்த சத்தியத்தை அநேகர் போதிப்பதை பார்க்கும்போது, நாங்கள் மகிழ்ச்சி அடைக்கிறோம். ஆனால் அவர்கள் இன்னும் அடுத்த படிகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

**படி 2: மனுக்குலம் பரிபூரண நிலமைக்கு மீண்டும் கொண்டுவரப்படுதல்**

19. மேலும், கிறிஸ்துவும் அவருடைய உண்மையான சபையும் சேர்ந்து ஆயிர வருட மத்தியஸ்த இராஜ்ஜியத்தில் ஆட்சி செய்யும் போது, மனுக்குலத்திலுள்ள எல்லோரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். தங்களை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்து அதனை கீழ்படிதலோடு நிறைவேற்றுவார்கள். இவ்விதமாக படிப்படியாக மனுக்குலம் பூரண நிலமைக்கு உயர்த்தப்படும். அதனால் அவர்கள் இழந்துப்போனத்தை மீண்டும் அடைவார்கள்.

20. அப் 3 : 19 - 21 கூறுகிறது, "பரலோகம் ஏற்றுக்கொள்ளவேண்டும்" (தன்னிடமாக வைத்துக் கொள்ளும் - விவிலியம் மொழிப்பெயர்ப்பு) இயேசுகிறிஸ்து - உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் (நிறைவேறித் தீருங்காலம் என்பது சரியான மொழிபெயர்ப்பு அல்ல - ஆங்கில வேதாகமம் காண்க) திரும்பப் பெறும் காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, அவருடைய இரண்டாம் வருகை அதுவரை துவங்காது என அறிகிறோம்.

21. திரும்பப் பெறுதல் என்பது பழைய சுயதேசத்துக்கு திரும்ப வருவதை அர்த்தப்படுத்துகிறது. மனுக்குல குடும்பத்தில் சுயநிலையானது தேவனின் ரூபத்தைப் போல், தேவனின் சாயலைப்போல் (**Image of God and likeness of God**) ஆனது, இவை நம்முடைய ஆதிப்பிதா ஆதாமிடமும் ஆதித்தாய் ஏவாளிடமும் பிரதிபளித்தது. தேவனின் ரூபம் என்பது பரிபூரண ஜீவி, பரிபூரண நிலைமையில், 'மிகவும் நன்று' என்பதாய் அர்த்தப்படுத்தும் (ஆதி 1 : 26, 27, 31; எபி 2 : 6 – 8) நிலையில் இருப்பதாகும். தேவனின் சாயல் பெறுதல் என்பது தேவன் அண்டசராசரத்தையும் ஆட்சி செய்பவர் போல் மனிதன் அனைத்தையும் பூமியின்மேல் ஆண்டுக்கொள்வதை அர்த்தப்படுத்துகிறது என நாம் புரிந்துக்கொள்ளலாம் (ஆதி 1 : 26, 28, 29; மத் 25 : 31).

22. தேவனுடைய ரூபம் (**Image**) என்பது சரீர சம்பந்தமாக, மனது சம்பந்தமாக, ஒழுக்க ரீதியாக மற்றும் சமய சம்பந்தமான விஷயங்களில் பரிபூரணமடைவதைக் குறிக்கிறது. தேவனுடைய சாயல் (**likeness**) என்பது பரிபூரண பூமியானது பரிபூரண ஆட்சியாளர்களாய் பொறுப்பேற்று இருப்பதை குறிக்கிறது. இதற்கு ஆதாம், ஏவாள் விழுந்து போவதற்கு முன்னுள்ள நிலை உதாரணம். ஆனால் பவுல் (எபி 2 : 8)இல் சுட்டிக்காட்டுவதுப்போல் தேவனுடைய ரூபமும் சாயலும் தற்போது இல்லாமல் போய்விட்டது. (ஆதியில் உள்ள பரிபூரண நிலை மற்றும் ஆளும் உரிமை) தேவனுடைய ரூபம் இருக்கவேண்டிய இடத்தில் சரீர சம்பந்தமான, மனது சம்பந்தமான, ஒழுக்க ரீதியான மற்றும் சமய சம்பந்தமான வீழ்ச்சி வந்துள்ளது. தேவனுடைய சாயல் இருப்பதற்கு பதிலாக சாபம் நிறைந்த இவ்வுலகத்தில் மனிதனை கொடுங்கோன்மை ஆட்கொண்டு இருக்கிறது. அவை அவனை அதிகமாக அவனுடைய் ஜீவன் அழிக்கும் வரை ஒடுக்கிறது. இவையெல்லாம் ஆதாமின் பாவத்தினால் மனுஷன் மேல் வந்ததாக வேதாகமம் உறுதியாகக் கூறுகிறது. (ஆதி 3 : 1 – 24; ரோம 5 : 12 – 21; Iகொரி 15 : 21, 22). தற்போது மனுக்குலம் இதனால் ஏற்பட்ட சேதத்தின் அழிவில் உள்ளது. நமது சந்ததியின் இந்த துக்கமான, நிலைக்குலைந்த நிலை நமது சிருஷ்டிகரின் மிகுந்த அனுதாபத்தையும், இரக்கத்தையும் பெற அவரிடம் முறையிட்டிருக்கிறது. தேவனுடைய அதிருப்தியினால் நிறைந்த மரண சாப தண்டனையின் (மரணம்

நித்தியமாக - உயிரோடே வதைத்தல் அல்ல) மத்தியிலும் விழுந்து போன மற்றும் ஆக்கினைக்கு உட்பட்ட - மனிதனை மரணத்தினின்று மீட்க அவருடைய அன்பான குமாரனை உலகத்திற்கு அனுப்பி இவ்விதம் மீட்கும் பொருளை கிரயம் செலுத்தி மனுக்குலத்தின் மேலுள்ள தமது இரக்கத்தை நினைவுகூர்ந்தார். ( I தீமோ 2 : 4 – 6; மத் 20 : 28; யோவா 3 : 17; ரோம 5 : 7, 8, 16 – 19)

23. மீட்கும் பொருளை கிரயமாகச் செலுத்துவதற்கு, கிறிஸ்துவின் முதல் வருகை இருந்தது போல, அவருடைய இரண்டாம் வருகை அந்த மீட்கும் பொருள் கிரயத்தை தெரிந்தெடுக்கப்படாத மற்றவர்களுக்கு கொடுக்கவும் அவர்களுக்கு மீட்பு கிடைக்கச் செய்யவும் ஆகும். அதாவது மனுக்குலம் அனைத்தும் பழைய அசல் நிலைக்கு (பாவத்திற்கு முன்னான ஏதேனின் நிலைக்கு) திரும்ப வருவதற்குரிய காலமாகும். திரும்ப கொடுத்தலின் காலத்தில் (times of restitution அப் 3 : 21), ஆதாமின் பாவத்தினால் அழிந்துபோன தேவ சாயலும், ரூபமும் மறுபடியும் அனைத்து சந்ததியார் மேலும் கொண்டுவர இயேசு மீட்கும் பொருள் கிடைக்கச் செய்யும் காலமே அவரது இரண்டாம் வருகையாகும். அவரது முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட சுவிசேஷயுகமானது, அவரது மணவாட்டி சபையை தெரிந்தெடுத்து அதற்கு மட்டும் ஆசீர்வாதம் கிடைக்கும்படி செய்த காலமாகும்.

24. பாவமற்ற மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் மரணம் ( I தீமோ 2 : 3 - 6) அனைவருக்கும் ஆதாமின் பாவத்தினால் வந்த ஆக்கினையிலிருந்து விடுதலை பெறுவதற்கு வேண்டி போதுமான மீட்பின் புண்ணியத்தை அளிக்கிறது. அதுமட்டுமல்லாது அந்த ஆக்கினையினிமித்தம் விளைந்த பாதிப்புகளிலிருந்தும் மீட்புபெற ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுக்க உத்தரவாதமாய் உறுதியளிக்கிறது. அதாவது கிறிஸ்துவின் மீட்பின் புண்ணியம் ஆதாம் பாவம் செய்யுமுன்னிருந்த அசல் பரிபூரண நிலைக்கு மனுக்குலம் மறுபடியும் திரும்புவதற்கு ஒரு தருணத்தை கொடுக்கிறது. மகிமையான தேவரூபம் மனுக்குலத்திற்கு திரும்ப வரச்செய்யவும், பரிபூரண சரீரத்தை, மனதை மற்றும் இருதயத்தை மனுக்குலத்திற்கு கொடுக்கவும், மேலும் தேவசாயலைப் பெறச் செய்யவும் அதாவது மறுபடியும் ஏதேனாக மாற்றப்பட்ட இப்பூமியில் பரிபூரண ஆட்சியை மனுக்குலத்திற்கு கொடுக்கவும் (“அதைக் கீழ்படுத்தி ஆண்டுக்கொள்ளுங்கள்” ஆதி 1 : 28) கிறிஸ்து வருவது அவரது இரண்டாம் வருகையின் நோக்கங்களின் ஒரு பகுதியாகும். கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சிக்குரிய நிபந்தனைகளை தெளிவாக ஏற்றுக்கீழ்படிகிற அனைவரும் இப்படிப்பட்ட எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுவார்கள்.

25. இவ்வாறு திரும்பப் பெறுதலின்போது அல்லது மீண்டும் பழைய நிலையை அடையும்போது (Restitution or Restoration) ஏதேன் போன்ற நிலைக்கு கொண்டு வருவது மட்டுமல்லாது, பரிபூரண இயற்கை சார்புகள் ஒன்றுக்கொன்று பூரணமாய் நிலைவரப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் (Ecology) பூமியிலே காணப்படும். மேலும் ஆதாம் முதலில் பரிபூரணமாய் இருந்ததுபோல உற்சாகமாய் அப்பொழுது கீழ்படிகிற மனுக்குலம் பரிபூரணப்படுத்தப்படும். மனுக்குலம் பொதுவாக பரலோகத்தில் அல்ல பூமியில் என்றும் வாழ்வதற்காக சிருஷ்டிக்கப்பட்டது. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து தேவதூதர்களைக் கொண்டு சுடரொளி பட்டயத்தால் விரட்டப்பட்டு தோட்டத்திற்கு புறம்பாக்கப்பட வேண்டியதாயிற்று. இல்லாவிடில் அவர்கள் தொடர்ந்து ஜீவனுக்குரிய மரத்தின் கனிகளை உண்டு பூமியிலே பரிபூரண மனிதர்களாகச் சதாகாலமும் ஜீவித்திருக்கலாம்; மரிக்க வேண்டியதும் வந்திருக்காது (ஆதி 3 : 22 - 24). தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டும் மனுக்குலத்திற்கான பொதுவான சட்டத்திலிருந்து அதாவது பூலோகவசிகளாக வாழும் நிர்ணயத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டவர்களாய் பரலோகத்தில் நித்திய காலமாய் நித்திய வாசியாக இருப்பார்கள் (எபி 10 : 34; I பேது 1 : 4). மற்ற எல்லா மீட்கப்பட்ட மனுக்குலமும் திரும்பக் கொடுத்தலின் இரட்சிப்பை பெற்று பூமியின் வாழ்வார்கள்.

26. இவ்வாறு திரும்பக் கொடுத்தவைகளைப் (Restitution) பற்றி படித்தல் தேவனுடைய திட்டத்தை பற்றி புரிந்துக்கொள்ள ஒரு முக்கியமான படி ஆகும். பலர் இதனை ஏற்றுக்கொண்டு கற்றுக் கொடுக்கிறார்கள் என்பதை நாங்கள் அறியும்போது மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் இதை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் இன்னும் ஏராளமாய் இருக்கிறார்கள்.

**படி 3: ஜீவனும் மரணமும் நன்மைக்காக**

27. தேவனுடைய வழிகள் சமத்துவமாய் பட்சபாதமில்லாமல் இருந்தாலும் (எசே 18 : 29 – 32). அதிலே மரணமானது தன் பலனை இடைப்பட செய்யக்கூடாததாலும் உயிரோடிருக்கிரவர்கள் மட்டுமல்லாது மரித்தவர்களும், இந்த

உலகத்திலே இரட்சிப்பு அடைய சந்தர்ப்பம் பெற்றுக் கொள்ளாதவர்களும் - எபி 6 : 4, 5 இல் கோடுக்கப்பட்டுள்ள ஐந்து ஆசீர்வாதங்களையும் அடையாதவர்களும், நன்மை பெற்று ஆயிரவருட ஆட்சியிலே பூமிக்குரிய இரட்சிப்படைய வாய்ப்பைப் பெறுவார்கள். Iதீமோ 2 : 3 - 6 இன்படி "தேவன் நமது இரட்சகர் - அவராலே எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் (ஆதாமின் அக்கினியிலிருந்து), சத்தியத்தை அறிகிற அறிவை (சரியான அறிவை) அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்பதனை அறிவார்கள். அந்த அறிவை பெறாமல் இறந்தவர்கள் அதைப் பெறவேண்டுமானால் அவர்கள் மரணத்திலிருந்து திரும்ப உயிரோடே எழுப்பப்பட வேண்டும். தேவன், அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளும்படி செய்வார். சங் 22 : 27 – 29; யோவா 1 : 9: லூக் 2 : 10 – 14; பிலி 2 : 6 – 11; எசே 16 : 44 - 63 ஆகிய வசனங்களில் அறியலாம்.

28. மனுக்குலத்திற்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை உண்மையாகவே புரிந்துக்கொள்ள வேண்டுமானால், தெரிந்து கொள்ளப்படாமல் இறந்தவர்களுக்கும் மற்றும் தெரிந்தெடுப்புக்குட்படாமல் உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும் திரும்ப கொடுத்தல் அல்லது மறுபடியும் ஆதாமில் இழந்துப்போன பழைய நிலைக்கு திரும்ப கொண்டுவரப்படுதல் (Restitution) என்ற வேதாகம சத்தியத்தை தெளிவாக அறிந்துக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

**படி 4: பூமியிலே நித்திய இராஜ்ஜியம்**

29. தெரிந்தெடுப்புக்குள் வராத ஆனால் மறுபடியும் அசல்நிலையில் நிறுத்தப்பட்ட மனுக்குலத்தோடு பூமியிலே அமைந்த தேவனுடைய இராஜ்ஜியம் 1000 வருடம் முடியுமளவுமட்டுமல்லாது, நித்திய காலமாக ஜீவியம் நடத்துவதற்கு ஆகும். இதனை அநேக வேத வாக்கியங்கள் தெளிவாக காட்டுகிறது. அதாவது தானி 2 : 35, 44; 7 : 13, 14, 18, 21, 27 இல் நித்திய நித்தியமாய் என்பதும், இந்த இராஜ்ஜியம் பரலோகத்தில் அல்ல ஆனால் "பரலோகத்தின் கீழே" என்பதும் குறிப்பிடத்தக்கது - (ஒத்து வாக்கியம் மத் 6 : 10; வெளி 11 : 15; 21 : 1 – 4).

30. "இப்பொழுதுள்ள பொல்லாத உலகம்" (கலா 1 : 4) அதனுடைய 'பரலோகங்கள்' (அதன் ஆட்சி செய்யும் அதிகாரங்கள்) அனைத்தும் சாத்தானுக்கும் அவனுக்கு கீழ்பட்டவர்களுக்கும் உட்பட்டுள்ளது (II கொரி 4 : 4). இந்த 'பூமி' (தற்போது உருவாகியுள்ள மனித சமுதாயம்) இந்த மகா உபத்திரவத்தின் காலத்திலே 'அக்கினி'யினால் அழிக்கப்பட வைக்கப்பட்டுள்ளது (II பேது 3 : 7 - 13). ஆனால் பூமியாகிய கிரகமோ மனித குடியிருப்புக்காக சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. மேலும் அது என்றும் நிலைத்திருக்கும் (ஏசா 45 : 18; சங் 115 : 16; பிர 1 : 4).

31. புதிய பூமி அதாவது புதிய சமுதாய ஒழுங்குகள் மறுபடியும் பழைய, பரிபூரண, மீட்கப்பட்ட, சமாதானமான, பாதுகாப்பான, சந்தோஷமாக வாழும் மனுக்குலத்துடன் சதாகாலம் நிலைத்திருக்கும். அதேவிதமாக புதிய வானம் அதாவது புதிதாக அமைந்த தேவனால் தெரிந்தேடுக்கப்பட்டவர்களாலான ஆவிக்குரிய ஆட்சி இருக்கும் (ஏசா 65 : 17; 66 : 22; II பேது 3 : 13). "வானத்திலும், பூமியிலும்- பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் - சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக" (வெளி 5 : 13) என்று சொல்லும் இந்த மகத்துவமான எதிர்பார்ப்புகளுக்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மகத்துவமான எதிர்பார்புகளுக்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மகத்துவமான வேதாகம சத்தியங்களை எல்லாரும் படிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் போதிக்கவும் நாங்கள் அனைவரையும் ஊக்குவிக்கிறோம்.

BS 582 : 69